**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 05 ஆம் நாள் புதன்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. சே.சங்கீதா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 60/2018** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | ருக்மணி | **வயது** | : | 55 |
| **த.பெ** | : | சேகர் | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | போளூர் | **தொழில்** | : | கூலி வேலை |

**<u>05.11.2025 – வா.சா.1 குறுக்கு விசாரணை</u>**

1)நான் இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிலத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நானும், 1ம் வாதியும் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். தாவாவில் உள்ள சங்கதிகளை என் வழக்கறிஞர் படித்துகாண்பித்தாரா என்றால் படித்துகாண்பித்தார். அதில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். என் தந்தை பெயர் கோவிந்தசாமி. என் தந்தையுடன் பிறந்தவர்கள் யார் என்றால் தம்பி வீராசாமி உள்ளார். தாவாவிலும், முதன்மை விசாரணை வாக்குமூலத்திலும் வழக்கு சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்று குறிப்பிடபடவில்லை என்றால் நான் தெரிவித்திருந்தேன்.

2)**வா.சா.ஆ-1** ஆவணத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் என் வழக்கறிஞருக்கு தான் தெரியும், எனக்கு தெரியாது. **வா.சா.ஆ-1** ஆவணத்திலுள்ள தாவா சொத்தானது என் தந்தைக்கு மட்டும் அல்ல அவரது சகோதரரான வீராசாமிக்கும் என் பாட்டனார் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தை என் தந்தை அவரின் சகோதரர்களே பிரித்துகொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி கோவிந்தசாமிக்கும், வீராசாமிக்கும் தாவாசொத்து பாத்தியப்பட்டது என்று தாவாவிலும், முதன்மைவிசாரணை வாக்குமூலத்திலும் நான் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேலும் தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்துவிவரத்தில் 1 வது அயிட்ட சொத்து **வா.சா.ஆ-1** ஆவணத்தை குறிப்பிட்டுள்ள அளவை விட அதிகமாக நான் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

3)மேலும், **வா.சா.ஆ-1** ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே நெம்பர் 341, 205 சொத்தை தாவாவில் நான் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியாது. **வா.சா.ஆ-1** ஆவணத்தில் சர்வே நெம்பர் 199/2 பி என்றுதான் உள்ளது ஆனால் என் தாவாசொத்து விவரத்தில் நான் அயிட்டம் 3,4,6 சர்வே நெம்பர்கள் நான் கூடுதலாக போட்டுள்ளேன் என்றால் தெரியாது, அதெப்படி இல்லாமல் இருக்கும். **வா.சா.ஆ-1** தானசெட்டில்மெண்ட்டில் சர்வே நெம்பர் 198 ல் 0.33 ½ செண்ட் என்றுதான் உள்ளது ஆனால் என்னுடைய தாவாவில் சொததுவிவரத்தில் அயிட்டம் 2 மற்றும் 5 சர்வே நெம்பர்களை நான் கூடுதலாக சொத்தை குறிப்பிட்டுள்ளேன் என்றால் தெரியாது.

4)தாவாசொத்தானது **வா.சா.ஆ-1** ஆவணத்தின்படி என் தந்தைக்கு மட்டும் அல்லாது அவரின் சகோதரர் வீராசாமிக்கும் பாத்தியப்பட்டது ஆகையால் இந்த வழக்கானது என் சித்தப்பா வீராசாமி அல்லது அவர் இறந்திருந்தால் அவரின் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினராகளாக சேர்த்திருக்க வேண்டும் என்றால் நாங்கள் சேர்க்காதது தவறுதான். மேலும், நான் கூறும்படி தாவாசொத்தானது என் தந்தை கோவிந்தசாமிக்கே பாத்தியப்பட்டதாக இருந்திருந்தாலும் **வா.சா.ஆ-1** படி தாவா சொத்துவிவரம் சர்வே நெம்பர் மற்றம் விஸ்தீரணங்கள் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல. **வா.சா.ஆ-1** வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட போலியான ஆவணம் என்றால் சரியல்ல. **வா.சா.ஆ-2 மற்றும் 3** ஆவணங்களின்படி என் தந்தையின் மனைவி பச்சியம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல.

5)என் தந்தை மற்றம் தாய் எனக்கும் 1ம் வாதிக்கும் சவரச்சனை எல்லாம் செய்து திருமணம் செய்துவைத்தார்கள், ஆகையால் எனக்கு தாவா சொத்தில் பங்கில்லை மேலும் தாவாசொத்தானது பச்சையம்மாளுக்குதான் உரிமை, மேலும் பச்சையம்மாளின் பேரன்களான முருகன் மற்றும் ஆறுமுகம் கடைசிகாலத்தில் பச்சையம்மாளை பராமரித்ததால் பச்சையம்மாள் தாவா சொத்தை மேற்படி 4ம் 5ம் பிரதிவாதிகளுக்கு உயில் எழுதிவைத்துவிட்டார் என்றால் சரியல்ல. என் தாய் பச்சையம்மாள் எப்போது இறந்தார் என்றால் சுமார் 10 வருடங்கள் இருக்கும், தேதி ஞாபகமில்லை. பச்சையம்மாள் இறந்தபிறகு தாவாசொத்தை இன்னாள் வரை 4,5ம் பிரதிவாதிகள் பயிர்வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

6)தாவா சொத்து என் தந்தை மற்றும் அவரின் சகோதர் இடையே முதலில் பாகம் பிரிக்கபடாத சொத்து என்பதாலும், மேலும் என் தந்தையின் சகோதரர் வீராசாமி மற்றும் அவரின் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததாலும், மேலும் **வா.சா.ஆ-1** ஆவண சொத்து தாவா சொத்தும் அளவீடுகளும், விஸ்தீரணங்களும், சர்வே நெம்பர்களும் வெவ்வேறாக உள்ளதாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளின் செலவுதொகையுடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER
Digitally signed by SALMA BASEER
Date: 2025.11.06 10:53:02 +0530

District Munsif,
Polur.